2017 ஜூன் 14]

நிருவாகத்தால் தேர்வு செய்யப்பட்டு, தாலுகா அலுவலகம் அங்கே செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டவுடன், அனைத்து மக்களுடைய ஒருமித்த கருத்தாக, குறிப்பிட்ட அந்த இடத்திலே கட்டடம் கட்ட வேண்டுமென்கிற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். எனவே, இடம் தேர்வு செய்வதிலே, மாவட்ட நிருவாகம், மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைவரிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டவுடன், அங்கே உடனடியாகக் கட்டடங்கள் எழுப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற, அதைப்போல பழைய கட்டடங்களில் செயல்படுகின்ற அலுவலகங்கள் அனைத்திற்கும் தேவையான புதிய கட்டடங்களைக் கட்டித் தருகின்ற ஒரே அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

9—

கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை

***12846—திரு. ஆர். கணேஷ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் தொகுதி, தும்மனட்டி ஊராட்சி, தும்மனட்டியில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2017 ஜூன் 14

மாண்புமிகு திரு. பா. பெஞ்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அனுதினமும் போற்றி வணங்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

உதகமண்டலம் தொகுதி, தும்மனட்டி ஊராட்சி, தும்மனட்டியில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரியில் கிட்டத்தட்ட 80, 90 தனியார் தேயிலை ஆலைகளும், கிட்டத்தட்ட 16, 17 கூட்டுறவு ஆலைகளும் இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு சென்ற ஆட்சியில் ஆரம்பித்து, இந்த ஆட்சியில் இப்போதுவரை, கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான ஒரு factory முடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். அப்பகுதியில் இருபதாயிரம் தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. தனியார் ஆலை அதிபர் மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. சாந்தி ராமு அவர்கள் இங்கு இருக்கிறார். ஆலை அதிபர்கள் கேட்கும் தேயிலையைக் கொடுக்க முடியாமல், விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அருமையாக தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், ஊட்டி மக்கள் படுகின்ற கஷ்டங்கள் உங்களுக்குத் தெரியாது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை மானியக் கோரிக்கையின்போது பேசவிருக்கிறேன். இருபதாயிரம் தேயிலை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பச்சைத் தேயிலையை கிட்டத்தட்ட 20 கி.மீ. தூரம் சுற்றி, எடுத்துச் செல்வதற்குள், அது வெந்து, வீணாகிவிடுகிறது. எனவே, தயவுசெய்து தும்மனட்டியில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டும். அதற்குத் தேவையான 5 ஏக்கர் நிலம் தயாராக இருக்கிறது; 6 கோடி ரூபாய்தான் செலவாகும்; இது சாதாரண பணிதான். கிட்டத்தட்ட 20,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் அதன்மூலம் பாதுகாக்கப்படும். தேயிலை விலை மிகவும் குறைவாக இருக்கிறது. நாங்கள் தேயிலையை ரூ.13/– கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், வெளியில் ரூ.300/–க்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

2017 ஜூன் 14]

எங்களுக்கு தேயிலைத் தூளுக்கு ரூ.100/— அல்லது ரூ.80/—தான் கிடைக்கிறது. தயவுசெய்து இதை மனதில்கொண்டு, இந்த அரசு மக்களுக்காக ஆட்சி செய்கிறது என்பது உண்மையானால், இந்தக் கோரிக்கையை நிச்சயமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் 15 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 24,000 சிறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். உதகமண்டலம் தொகுதியில், தற்போது எபநாடு மற்றும் கட்டபெட்டு ஆகிய தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேற்படி இரண்டு தொழிற்சாலைகளிலும் சுமார் 2,199 சிறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த இரண்டு தொழிற்சாலைகளுக்கும் உறுப்பினர்களிடமிருந்து தேயிலை வரத்து குறைவாகப் பெறப்பட்டு வருகின்றது. மேலும், உதகமண்டலம் தொகுதியிலுள்ள நஞ்சநாடு கிராமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுமார் 12 கிராமங்களில் வசிக்கும் சிறு தேயிலை விவசாயிகளின் நலன்கருதி, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நஞ்சநாடு கிராமத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டடப் பணிகள் மற்றும் இயந்திரங்கள் நிறுவும் பணிகள் முடிவுபெற்றுள்ளன. இத்தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் துவங்கும் நிலையில் உள்ளது. மேலும், இத்தொகுதியைச் சார்ந்த தும்மனட்டியில் ஏற்கெனவே தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை அமைப்பதற்குப் பதிவு செய்யப்பட்டு, உற்பத்திப் பணிகள் ஏதும் தொடங்கப்படாமலேயே, 12—6—2000 அன்று கலைக்கப்பட்டது. எனவே, இந்நிலையில், தும்மனட்டி ஊராட்சி, தும்மனட்டியில் புதிதாக கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை. இருப்பினும், புதிதாகத் துவங்கப்படவுள்ள நஞ்சநாடு தொழில் கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலையிலோ அல்லது இலை வரத்து*

குறைவாகப் பெறப்படும் எபநாடு மற்றும் கட்டபெட்டு தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளிலோ, தும்மனட்டி ஊராட்சிக்குட்பட்ட சிறு தேயிலை விவசாயிகள் உறுப்பினர்களாகச் சேர்ந்து, தங்களது தேயிலையை வழங்கிப் பயனடையலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திரும்பத் திரும்பச் சொல்வதற்கு வேறொன்றுமில்லை. இந்தியாவில் மக்கள் குடித்துக் கொண்டிருப்பது ஊட்டி டீ—தான். மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தேயிலைக்கு 2 ரூபாய் மானியம் கொடுத்தார்கள், அது இப்போது வருவதில்லை. தயவு செய்து அதை மனதில் கொள்ள வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன இரண்டு இடங்களுக்கும் கிட்டத்தட்ட 25, 30 கிலோ மீட்டர் போக வேண்டும். அங்கு போவதற்குள்ளாக பச்சைத் தேயிலையின் கொழுந்து இலை எரிந்து, வீணாகிறது. விவசாயிகள் எடுத்துக்கொண்டு போகிற நிலைமையில் இல்லை. கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு பாதிக்கப்படுகிறது. இந்த ஒரு தடவை நீங்கள் 6 கோடி ரூபாயைப் பார்க்காமல், மக்களுக்காக கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலையை அங்கு நிறுவினால், ஓர் இலாபகரமான தேயிலைத் தொழிற்சாலையாக அது இருக்கும். அந்த 2 ரூபாய் மானியத்தையும் 5 ரூபாயாக மாற்றி, மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஒரு நல்ல முடிவினை, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஆலோசித்து, ஒரு சிறிய* budget factory—*யைக் கண்டிப்பாக நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை*

2017 ஜூன் 14]
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

மருத்துவமனைக்குக் கூடுதல் வசதிகள்

***9200—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் போக்குவரத்து நிறுவனம் மூலமாக நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைக்கவும், அவசரகால ஊர்தி மற்றும் அமரர் ஊர்தி வழங்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனம் மூலமாக நடத்தப்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் அமைக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், C.S.R. *நிதி மூலமாக அமரர் ஊர்தி 7 இலட்சத்து 98 ஆயிரத்து 821 ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, இயக்குவதற்கு தயார் நிலையில் உள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், இருக்கையில் இல்லை. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]